## கரோனா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு

# சென்னை மெட்ரோ ரயில்களில் 3.60 லட்சம் பேர் பயணம்

■ சென்னை

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு சென்னை மெட்ரோ ரயில்களில் மொத்தம் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேர் பயணம் செய்துள்ளனர்.

கரோனா ஊரடங்கில் தளர்வு அளிக்கப்பட்டுள்ள நிலையில், சென்னையில் 5 மாதங்களுக்குப் பிறகு கடந்த மாதம் 7-ம் தேதி மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது.

மெட்ரோ ரயில் நிலையங்கள், மெட்ரோ ரயில்களில் கரோனா முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயணிகளுக்கு உடல் வெப்ப அளவு பரிசோதனைக்கு பின்னர், வரிசையாக உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக பயண அட்டைகள் பெறுதல், ரீசார்ஜ் செய்வது மற்றும் செல்போன் உதவியுடன் மெட்ரோ ரயில் செயலியில் 'கியூ.ஆர்.' குறியீட்டு முறையில் டிக்கெட் எடுக்கும் முறையை ஊக்குவிக்கும் வகையில் 20 சதவீத கட்டண சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மெட்ரோ ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதன்படி, கடந்த மாதம் 7-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை மொத்தம் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேர் பயணம் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகளிடம் கேட்டபோது, "பயணிகளுக்கு 100 சதவீதம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மெட்ரோ ரயில் சேவை அளிக்கப்படுகிறது. கூட்ட நெரிசலைத் தவிர்ப்பது, சமூக இடைவெளியைப் பின்பற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்கள் வந்து செல்ல வசதியாக சுரங்கப்பாதைகள், நுழைவாயில்கள் திறக்கப்பட்டுள்ளன.

கரோனா காலத்தில் பயணிகளும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு தர வேண்டுமென வலியுறுத்துகிறோம். கரோனா அச்சத்தால் ஆரம்பத்தில் பயணிகளின் வருகை குறைவாக இருந்தது. தற்போது, படிப்படியாக அதிகரித்து வருகிறது. வரும் நாட்களில் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்" என்றனர்.